## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.80/2021

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு மார்ச் மாதம் 27 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : அங்கம்மாள் | மதம் | : இந்து |
| க/பெ | : ராஜாபாதர் | ஜாதி | : -- |
| வயது | : 68 | கிராமம் | : தியாகராயநகர் |
| தொழில் | : இல்லத்தரசி | வட்டம் | : சென்னை |

**27.03.2025**

**<u>வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு 1, 6, 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் எந்த ஊரில் வசிக்கிறேன் என்றால் தியாகராயநகரில் வசிக்கிறேன். எத்தனை வருடங்களாக வசிக்கிறேன் என்றால் 40 வருடங்களாக வசிக்கிறேன். எனக்கு திருமணம் ஆனதில் இருந்து அங்குதான் வசிக்கிறேனா என்றால் ஆமாம். எனக்கு எப்போது திருமணம் ஆனது என்றால் 16 வயதில் திருமணம் ஆனது. நான் திருமணம் ஆனது முதல் சென்னை தியாகராயநகரில் வசிக்கிறேன் என்றால் ஆமாம். வழக்கு சொத்தின் புல எண் தெரியுமா என்றால் புல எண்.83 ஆகும். அந்த புல எண் உட்பிரிவு என்ன என்றால் புல எண்.83/10 ஆகும். வழக்கு சொத்தின் விஸ்தீரணம் தெரியுமா என்றால் ஞாபகமில்லை.

2. நான் திருமணம் ஆனது முதல் சென்னை தியாகராயநகரில்தான் வசிக்கிறேன் என்றால் ஆமாம். ஏதாவது விசேஷத்திற்கு வந்து செல்வேன் என்றால் ஆமாம். வழக்கு சொத்து எங்கு உள்ளது என்றால் காபுல் கண்டிகையில் உள்ளது. நான் காபுல் கண்டிகையில் தொடர்ச்சியாக தங்குவதில்லை என்றால் சரிதான்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)